# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8069823

C

1. District : மாவட்டம் மதுரை
PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு
Year: ஆண்டு 2020
FIR No.: மு.த.அ. எண் 05/20
Date: நாள் 06.10.2020

2. (i) Act சட்டம்:
Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as
(ii) Act சட்டம்: Prevention of corruption
Sections பிரிவுகள்: amended by Prevention
(iii) Act சட்டம்: Act 1988
Sections பிரிவுகள்: of corruption (amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 1) 01.10.2020 at 12.30 hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை 2) 01.10.2020 at 17.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.10.2020
Time : நேரம் காலை 08.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.10.2020
Time : நேரம் காலை 08.30 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 2 கி.மீ தென் கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி வார்டு எண். 30, 31, மாநகராட்சி கணினி வரி வசூல் மையம், அண்ணா நகர், மதுரை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
—

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. M. செந்தில்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு முத்துச்சாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2020
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் டிராவல்ஸ் தொழில்
(g) Address : முகவரி 5/506, செந்தாஜி தெரு, சதாசிவம் நகர், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. கிருஷ்ணன், பில் கலெக்டர், வார்டு எண். 30, 31, மாநகராட்சி கணினி வரி வசூல் மையம், அண்ணா நகர், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 6/10/20 | [signature] 06/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.10.2020 at 07.30 hrs

Name: பெயர் A. அம்புரோஸ் ஜெயராஜா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
ஊ.த.க. பிரிவு,
மதுரை (06.10.2020)

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 06.10.2020-ஆம் தேதி காலை 08.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை, சதாசிவம் நகர், நேதாஜி தெரு, கதவு எண். 5/1506 என்ற முகவரியில் வசிக்கும் மு.செந்தில் குமார் த/பெ. முத்துச்சாமி என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர், M. செந்தில்குமார், த/பெ முத்துச்சாமி, 5/1506, நேதாஜி தெரு, சதாசிவம் நகர், மதுரை - 20. பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை அண்ணா நகர் சதாசிவம் நகரில் குடும்பத்துடன் வசிக்கிறேன். சொந்தமாக டிராவல்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான், மானகிரி கிராமம் 2 பிட்டில் ரீ சர்வே எண் 52/2-ல் பிளாட் எண் 31-ல் தலா 613 சதுர அடி அளவில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் உள்ள வீட்டை நடராஜன் என்பவரிடமிருந்து என் மனைவி லதா பெயருக்கு கடந்த 22.08.2019-ம் தேதியன்று கிரையம் முடித்தேன். நான், வாங்கிய அந்த வீட்டின் சொத்து வரி, குடிநீர் குழாய் வரி, பாதாள சாக்கடை வரி ஆகியவை இதுநாள் வரை வரி விதிப்பு எண் 683291 ன் படி நடராஜன் பெயரில் உள்ளது. எனவே, சொத்து வரி, குடிநீர் குழாய் வரி மற்றும் பாதாள சாக்கடை வரி விதிப்பை எனது மனைவி லதா பெயருக்கு மாறுதல் செய்யுமாறு உரிய மாநகராட்சி விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, எங்கள் வீட்டுப்பத்திரம், நடராஜன் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது எண் 115/205/1/2021/0001710, நாள்17.06.2020 ஆகியவற்றை இணைத்து கடந்த 05.09.2020-ம் தேதியன்று மாநகராட்சி மண்டல அலுவலகம் எண் 2-ல் வரி விதிப்பு பிரிவில் கொடுத்தேன். அங்கிருந்த அலுவலர் அதனைப் பெற்றுக் கொண்டு உங்கள் பகுதி பில் கலெக்டர் கிருஷ்ணன் என்பவர் உங்கள் வீட்டைப் பார்வையிட்ட பின்னர் சொத்து வரி பெயர் மாற்றம் செய்து தரப்படும் என்று கூறினார். அதன் பின்னர், மூன்று நாட்கள் கழித்து கிருஷ்ணன் எனது விண்ணப்பத்துடன் வீட்டை நேரில் வந்து பார்வையிட்டு எனது செல்போன் எண்ணை பெற்றுக் கொண்டு போனில் விவரம் சொல்கிறேன் என்று சொல்லிச் சென்று விட்டார். அதன் பின்னர் கிருஷ்ணன் அவர்கள் 01.10.2020-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் என்னை அவரது செல்போன் எண். 99941 72730 - லிருந்து எனது செல்போன் எண். 91710 44567 க்கு தொடர்பு கொண்டு அண்ணாநகரில் உள்ள மதுரை மாநகராட்சி கணிணி வரி வசூல் மையத்திற்கு வரச்சொன்னார். நானும், அவர் அழைத்ததின்பேரில் மதியம் சுமார் 12.30 மணியளவில் கிருஷ்ணன் பணிபுரியும் கணிணி வரிவசூல் மையத்திற்கு நேரில் சென்று அவரிடம் எனது வீட்டின் சொத்து பெயர் மாற்றம் குறித்து கேட்டேன். அப்போது அவர் என்னிடம் நீங்கள் 3000 ரூபாய் கொடுத்தால் நான் பரிந்துரை செய்து பைலை மண்டல அலுவலகத்துக்கு அனுப்பி உங்கள் மனைவி லதா பெயருக்கு சொத்து வரி விதிப்பு பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் எனது

மனைவியுடன் கலந்து பேசிவிட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். மீண்டும் அன்று 01.10.2020 - ம் தேதி மாலை கிருஷ்ணன் எனக்கு மிஸ்டு கால் கொடுத்தார். எனவே மாலை சுமார் 04.45 மணியளவில் நான் கிருஷ்ணனை அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்டு பேசியபோது அவர் என்னை வார்டு அலுவலகத்திற்கு வரச்சொன்னார். நானும் அவரது அலுவலகம் சென்று கிருஷ்ணன் அவர்களை நேரில் சந்தித்தபோது, அவர் என்னிடம் நான் கேட்ட பணத்தை கொடுத்தால் நான் உடனே பரிந்துரை செய்து உங்கள் பைலை மேலே அனுப்பி பெயர் மாற்றம் செய்து கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் தற்போது கொரோனா தடைக்காலமாக இருப்பதாலும், வேலை எதுவும் நிரந்தரமாக இல்லாத காரணத்தாலும் 3,000 ரூபாய் புரட்டுவது கஷ்டமாக உள்ளது, கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் நீங்கள் மண்டல அலுவலகம் செல்லாமல் நேராக என்னிடம் வந்து விண்ணப்பம் கொடுத்திருந்தால் ரூ.4,500/- கொடுத்திருக்க வேண்டும், ஆனால் உங்கள் விண்ணப்பம் மண்டல அலுவலகம் மூலம் வந்ததால் ஏற்கனவே ரூ.1,500/- குறைத்து தான் சொல்லியிருக்கிறேன், இதற்கு மேலும் பணத்தைக் குறைக்க முடியாது, எனவே, 3,000 ரூபாய் கொடுத்தால்தான் பரிந்துரை செய்து உங்கள் பைலை மேலே அனுப்ப முடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். எனவே, என்ன செய்வது என்று தெரியாமல் நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். சிறிது நேரத்தில் மீண்டும் கிருஷ்ணன் மாலை சுமார் 05.00 மணியளவில் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு வருகிற 6 ம் தேதி செவ்வாய்கிழமையன்று 3,000 ரூபாய் கொடுத்தால் வேலை வேகமாக முடியும் இல்லை என்றால் வீணாக அலைய வேண்டியதுதான் என்று கண்டிப்பாக சொன்னார். நான், பார்த்து ஏற்பாடு செய்யுங்கள் சார் என்று சொல்லி வந்துவிட்டேன். ஆனால், அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, எனது மனைவி லதா பெயருக்கு பரிந்துரை செய்து வரி விதிப்பு பெயர் மாற்றத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் ரூ.3,000/- லஞ்சம் கேட்கும் கிருஷ்ணன், பில் கலெக்டர், வார்டு எண் 31, மதுரை மாநகராட்சி அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என் மனைவி லதா பெயரில் விண்ணப்பித்த மாநகராட்சி பெயர் மாற்றம் செய்வதற்கான மனு எண்.17436, எனது மனைவி லதா பெயரிலுள்ள வீட்டுப்பத்திரம், மாநகராட்சி வரி ரசீது எண். 115/205/1/2021/0001710 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, (s-d) M.Senthilkumar 06/10/2020.

Sir, received the written complaint on 06.10.2020 at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a

case in Madurai V&AC Cr. No. 05/2020 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs., and took up investigation (s-d) A.Ambrose Jayaraja 06/10/2020, Inspector / V&AC, Madurai.

Original FIR along with original written complaint of Tr.M. Senthilkumar s/o Muthusamy, 5/1506, Nethaji street, Sathasivam Nagar, Madurai 20, along with enclosures in Xerox copies of Property Tax Name transfer application No. 17436 of Madurai Corporation in the name of Tmt. Latha, Purchase deed document No.3493/2019 in the name of Tmt.Latha and Madurai Corporation, Tax Receipt No. 115/205/1/2021/0001710 dated 17.06.2020, is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

06/10/2020
(A.Ambrose Jayaraja)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.